



## ‘திராவிட மாடல்’ ஆட்சியின் செயல் திட்டங்களை, சாதனைகளை

# மக்களிடம் கொண்டுசேர்க்கும் கடமை ஒவ்வொருவருக்கும் இருக்கிறது!

## சென்னை கிழக்கு மாவட்டம் சார்பில் – 72 இணையர் சுயமரியாதைத் திருமணத்தை

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நடத்தி வைத்து வாழ்த்துரை!

**சென்னை, மார்ச் 14–**

**சென்னை கலைவாணர் அரங்கத்தில், கழகத்தலைவர் - முதலமைச்சர் அவர்களின் 72-வது பிறந்த நாளை முன்னிட்டு, சென்னை கிழக்கு மாவட்டக் கழகம் சார்பில் 72 இணையர்களுக்கு சுயமரியாதைத் திருமணத்தை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று நடத்தி வைத்தார்.**

**அப்போது அவர் இல்லற வாழ்வில் இணைகின்ற 72 இணையர்களும், வாழ்வில் எல்லா வளமும் பெற்று, கலைஞரும் – கழகமும் போல, கழகத்தலைவர் அவர்களும் – திராவிட மாடலும் போல பல்லாண்டு வாழ்கவென வாழ்த்தினார்.**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய வாழ்த்துரை வருமாறு:**

இந்திய ஒன்றியத்தின் நம்பர்-ஒன் முதலமைச்சர் என்று அனைவராலும் போற்றப்படுகின்ற கழகத் தலைவர் அவர்களின் 72-வது பிறந்தநாளை முன்னிட்டு, சென்னை கிழக்கு மாவட்டக் கழகம் சார்பாக, அண்ணன் சேகர்பாபு அவர்கள் ஏற்பாடு செய்துள்ள 72 இணையர்களுக்கு உங்கள் முன்னிலையில், திருமணத்தை நடத்தி வைப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். அவர்கள் அனைவருக்கும் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### மிகச்சிறப்பான ஏற்பாடு

கலைவாணர் அரங்கத்தில், பல்வேறு நிகழ்ச்சிகள் நடந்து இருக்கின்றன. நானும் நூற்றுக்கணக்கான நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு உள்ளேன். இங்கு வந்த பார்த்தபிறகுதான் தெரிகிறது, `இது கலைவாணர் அரங்கமா, இல்லை, கல்யாண அரங்கமா’ என்று யோசிக்க வைக்கின்ற அளவில் அத்தனை மணமக்களையும் அமர வைத்து, இன்றைக்கு இந்த திருமண விழாவை அமைச்சர் சேகர்பாபு மிகச்சிறப்பாக ஏற்பாடு செய்து இருக்கிறார்.

பொதுவாக, நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்பவர்கள். அழைப்பிதழ்களை அடித்து கொடுப்பார்கள். ஆனால், அமைச்சர் சேகர்பாபு அவர்கள் மட்டும்தான் எப்போதுமே புத்தகம் அடித்துக் கொடுப்பார். அந்த வகையில், நேற்று மாலைதான் எனக்கு பத்திரிக்கை கொடுத்தார். இந்த திருமண நிகழ்ச்சிக்குக் கடைசியாக அழைக்கப்பட்டவன் நான்தான். கடந்த எழுபத்தி ஐந்து நாட்களாக 72 நிகழ்ச்சிகள். அண்ணன் சேகர்பாபு அவர்கள் சொன்னதுபோல், என் தாயார்தான் முதல் நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்தார்.

காரில் வரும்போது நானும் அமைச்சர் சேகர்பாபுவும் பேசிக்கொண்டு வந்தோம். சென்ற ஆண்டு, இதேபோன்ற ஒரு திருமண நிகழ்ச்சியை அமைச்சர் சேகர்பாபு அவர்கள் நடத்தினார். நானும் அந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்வதாக இருந்தது. கடைசி நிமிடத்தில் என்னால் வர முடியவில்லை. நான் அப்போது நாடாளுமன்றத் தேர்தலுக்கான பிரச்சாரத் துவக்க நிகழ்ச்சி இராமநாதபுரத்தில் கலந்துகொண்டதால் என் தாயார் சென்ற வருடம் இதே நாள் அந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டார்.

### 76 நாட்களுக்கு 72 நிகழ்ச்சிகள்!

இந்த வருடம் என் தாயாருக்குப் பதிலாக நான் வந்திருக்கிறேன். அண்ணன் சேகர்பாபு அவர்களைப் பற்றி சொல்ல வேண்டும் என்றால், என்ன சொல்வது என்று எனக்குத் தெரியவில்லை. நிறைய சொல்லிவிட்டேன். அவர் எப்படி யோசிக்கிறார் என்றே தெரியாது.

76 நாட்களுக்கு 72 நிகழ்ச்சிகள். அறிவுக் களம், கலைக் களம், மாலை நேர பொதுக்கூட்டம், நலத்திட்டங்கள், திருமண நிகழ்ச்சி என்று பல்வேறு நிகழ்ச்சிகளை மிகச் சிறப்பாக நம் தலைவரின் பிறந்தநாளைக் கொண்டாடி வருகிறார். அதற்கு எனது வாழ்த்துகள்.

### அவருக்கு மட்டும் 48 மணி நேரம்!

ஒருபக்கம் மாவட்டக் கழகச் செயலாளர், இன்னொருப் பக்கம் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் என இரண்டு முகங்கள் உண்டு. நான் பலமுறை அவரிடம் கேட்டு இருக்கிறேன். நீங்கள் ஒருவர்தானா, இல்லை இரண்டு பேரா, உங்களைப்போலவே உருவ ஒற்றுமை



உள்ள உங்களின் அண்ணனோ, தம்பியோ இருக்கிறார்களா என்று கேட்டிருக்கிறேன். ஏனென்றால், நிறைய நிகழ்ச்சிகள் நடத்துகிறீர்கள். அனைத்து இடங்களிலும் இருக்கிறீர். எல்லோருக்கும் ஒரு சிம்மசொப்பனப் போட்டியாக இருக்கிறீர். அவர் முழு நேர அரசியல்வாதி. நமக்கெல்லாம் 24 மணி நேரம்தான், ஆனால் சேகர்பாபு அண்ணன் அவர்களுக்கு மட்டும் 48 மணி நேரம் இருக்கும்.

அவர் நடத்தும் நிகழ்ச்சிக்குப் பக்கத்தில் யாரும் நிற்க முடியாது. யாரும் தெரியமாட்டார்கள். இதில் பல அர்த்தங்கள் உண்டு. அது மேடையில் இருக்கும் அனைவருக்கும் தெரியும். அவருக்கும் தெரியும்.

மாவட்டக் கழகச் செயலாளராகவும், அமைச்சராகவும் ஆயிரக்கணக்கான திருமணங்களைச் செய்து வைத்து இருக்கிறார். இந்த மூன்று வருடத்தில் மட்டும் கிட்டத்தட்ட 1,700 திருமணங்களை அண்ணன் சேகர்பாபு அவர்கள், அவர் துறை சார்பாக நடத்தி வைத்திருக்கிறார். இனிமேல், அவர் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் மட்டுமல்ல, திருமண திட்டங்களுக்கு என்று ஒரு துறை இருந்தால், அதற்கும் அவர்தான் அமைச்சர்.

சென்ற மாதம் பிப்ரவரி 14-ஆம் தேதி அவரின் துறை சார்பாக 48 இணையர்களுக்குத் திருமணத்தை, அவரின் ஏற்பாட்டில் நான்தான் நடத்தி வைத்தேன். இன்றைக்கு மாவட்டக் கழகம் சார்பாக, 72 இணையர்களுக்கு திருமண ஏற்பாட்டைச் செய்து அதற்கும் என்னை அழைத்து இருக்கிறார். சீர்திருத்த முறையில், சுயமரியாதைத் திருமணத்தை நடத்திவைத்து இருக்கிறோம்.

### எங்கள் வீட்டில் காதல் திருமணம்தான்!

இதில் எனக்கு இன்னும் கூடுதல் பெருமை என்னவென்றால், அனைவரும் கலப்புத் திருமணம் செய்கிறார்கள். முக்கியமாக காதல் திருமணங்கள் பல இருக்கும் என்று நான் நம்புகிறேன். இந்தக் காலத்தில் கலப்புத் திருமணம் நடப்பது மிகப்பெரிய விஷயம். காதல் திருமணத்தில் இருக்கும் பிரச்சினைகள் பற்றி எனக்குத் தெரியும். ஏனென்றால், எனக்கும் காதல் திருமணம்தான். ஆனால், எங்கள் வீட்டில் ஒன்றும் பிரச்சினை இல்லை. கலைஞர் இருக்கும் காலத்தில் இருந்து, தொடர்ந்து இரண்டு தலைமுறையாக எங்கள் வீட்டில் காதல் திருமணம்தான்.

எங்கள் வீட்டில் யாராவது காதல் திருமணம் இல்லை, வீட்டில் பார்த்த பெண்ணோடு திருமணம் என்றால், என் தாத்தா ஒருமாதிரி பார்ப்பார். `என்ன பிரச்சினை உனக்கு?’ என்று கேட்பார். காதல் திருமணங்கள் அவ்வளவு சுலபமாக நடக்



> மணமக்களுக்கு ஒரு வேண்டுகோள். உங்களுக்குப் பிறக்கின்ற குழந்தை அது ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருந்தாலும் சரி அழகான ஒரு தமிழ்ப் பெயரைச் சூட்டுங்கள். மணமக்கள் இருவரும் தந்தை பெரியாரும் – பகுத்தறிவும் போல, பேரறிஞர் அண்ணாவும் – தமிழ்நாடும் போல, முத்தமிழறிஞர் கலைஞரும் – தமிழும் போல, நம் தலைவரும் – உழைப்பும் போல இருவரும் ஒன்றாகச் சேர்ந்து பயணிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்த சிறப்பான வாய்ப்பை அளித்த அமைச்சர் சேகர்பாபு அவர்களுக்கு மீண்டும் எனது நன்றியைத் தெரிவித்து, மணமக்கள் அனைவரையும் பல்லாண்டு காலம் வாழ்க, வாழ்க என வாழ்த்துகிறேன்.

காது. பெண் வீட்டில் ஒப்புக்கொண்டால் மாப்பிள்ளை வீட்டில் ஒப்புக்கொள்ள மாட்டார்கள், மாப்பிள்ளை வீட்டில் ஒப்புக்கொண்டால், பெண் வீட்டில் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். பல வருடம் போராடி இருவரின் வீட்டிலும் ஒப்புக்கொண்டால், உறவினர்கள் யாராவது வந்து, ஏதாவது ஒரு பிரச்சினை செய்வார்கள். பலருக்கும் பல அனுபவங்கள் இருக்கும் என்று நினைக்கிறேன்.

அப்படிப்பட்ட நேரத்தில், இத்தனை திருமணங்களை ஒரே மேடையில் மகிழ்ச்சியான தருணத்தில் நடத்துவதற்கு, தலைவரின் பிறந்தநாளில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடந்தாலும், ஒரு சிறந்த மேடையாக சேகர்பாபு அவர்கள் அமைத்துக் கொடுத்து இருக்கிறார்.

மந்திரங்கள் எதுவும் சொல்லாமல், எல்லோருக்கும் புரிகின்ற மாதிரி, தமிழ்மொழியில் அனைவரும் வாழ்த்தி இந்த திருமணம் உங்களின் முன்னிலையில் சிறப்பாக நடைபெறுகிறது. முக்கியமாக, ஆணும், பெண்ணும் சரிசமமாக அமர வைக்கப்பட்டு, இந்தத் திருமண பந்தத்தில் இருவரும் இணைகிறீர்கள். இதுவெல்லாம் இன்று சாத்தியம். ஒரு காலத்தில் பார்த்தீர்கள் என்றால், இதுவெல்லாம் சாத்தியம் கிடையாது.

### முதல் காரணம் தந்தை பெரியார்!

நமக்கு புரியாத ஒரு மொழியில் பேசி, சாதி, மதம், சம்பிரதாயம் எல்லாம் பேசித்தான் திருமணங்கள் நடந்துகொண்டு இருந்தன. இன்றைக்கு இதுமாதிரியான முற்போக்கு திருமணங்கள் நடக்கிறது என்றால், அதற்கு முதல் காரணம் தந்தை பெரியார் அவர்களும், நீதிக் கட்சித் தலைவர்களும், பேரறிஞர் அண்ணா, நம் முத்தமிழறிஞர் கலைஞர், இப்போது நம் தலைவர் அவர்களின் உழைப்புதான் அதற்கு முக்கிய காரணம்.

### வருகை சதவிகிதம் அதிகரிப்பு!

குறிப்பாக, மகளிரின் பொருளாதாரத்திற்காக, நம் கழக அரசு அமைந்த பிறகு நம் முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொரு திட்டமாக செயல்படுத்தி வருகிறார். நம் அரசு அமைந்த பிறகு நம் முதலமைச்சர் இட்ட முதல் கையெழுத்து மகளிருக்காண கட்டணமில்லா விடியல் பயணம் திட்டத்திற்குத்தான். இந்த நான்கு வருடங்களில் மகளிர் 625 கோடி முறை பயணங்களை மேற்கொண்டு இருக்கிறார்கள். இதுதான் அந்த திட்டத்தின் வெற்றி. ஒவ்வொரு மகளிரும் மாதம் 800 ரூபாயிலிருந்து 850 ரூபாய் வரை சேமிக்கிறார்கள்.

குழந்தைகள் படிக்க வேண்டும் என்பதற்காக ஒன்றாம் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரை படிக்கின்ற அரசுபள்ளி குழந்தைகளுக்கு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு தமிழ்நாட்டில் செயல்படுத்துகிறார், நம் முதலமைச்சர் அவர்கள். இதனால், குழந்தைகள் பள்ளிகூடத்திற்கு வருகின்ற சதவிகிதம் அதிகமாகி இருக்கிறது.

பெண்கள் பள்ளிப் படிப்பு படித்தால் மட்டும் பத்தாது. உயர்கல்வி படிக்க வேண்டும் என்று புதுமைப்பெண் திட்டம் வழங்கப்படுகிறது. அரசுப் பள்ளியில் படித்து உயர்கல்வி எந்த கல்லூரியில் படித்தாலும், அவர்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் அவர்களின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படுகிறது. அதுதான் புதுமைப்பெண் திட்டம்.

இந்தத் திட்டத்தை செயல்படுத்தியதுடன் ஆண்களை விட பெண்கள் அதிகம் கல்லூரிக்குப் படிக்க ஆரம்பித்துவிட்டார்கள். உடனே, ஆண்கள் என்ன பெண்களுக்கு மட்டும் கொடுக்கிறீர்கள், ஆண்களுக்கும் சேர்த்து செயல்படுத்துங்கள் என்று சொன்னவுடன், தலைவர் அவர்கள் ஆண் மாணவர்களுக்கு, `தமிழ்ப்புதல்வன்’ என்ற திட்டத்தைச் செயல்படுத்தினார்.

### கலைஞர் மகளிர் உரிமைத்தொகை!

கலைஞர் மகளிர் உரிமைத்தொகைத் திட்டத்தின் வாயிலாக, ஒவ்வொரு மாதமும் 1 கோடியே 15 லட்சம் மகளிருக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் நம் முதலமைச்சர் அவர்கள் வழங்கி வருகிறார். இப்படி பல்வேறு திட்டங்களை நம் முதலமைச்சர் அவர்கள் பார்த்துப் பார்த்து செய்துகொண்டு இருக்கிறார்.

இந்தியாவில் எந்தத் தலைவருக்கும் இல்லாத ஒரு மிகப்பெரிய பெருமை நம் தலைவருக்கு இருப்பது, நம் தலைவர்கள் அவர்கள் நம் கழகத் தலைவராக பொறுப்பேற்று சந்தித்த அனைத்துத் தேர்தலிலும் வெற்றிப்பெற்ற ஒரே தலைவர், நம் தலைவர் அவர்கள்தான். நாம் கிட்டத்தட்ட 11 தேர்தல்களைச் சந்தித்துள்ளோம். 11 தேர்தலிலும் தமிழ்நாட்டு மக்கள் நமக்கு வெற்றியைக் கொடுத்து இருக்கிறார்கள் என்றால், ஒவ்வொன்றையும் பார்த்துப் பார்த்துச் செய்துகொண்டு இருக்கிறார் நம் தலைவர் அவர்கள்.

வருகின்ற 2026-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலுக்கு, நம் தலைவர் அவர்கள் நம் அனைவருக்கும் ஒரு இலக்குக் கொடுத்து இருக்கிறார். 234 தொகுதிகளில் குறைந்தது 200 தொகுதி நாம் வெற்றிபெற்று காட்ட வேண்டும். `வெல்வோம் இருநூறு, படைப்போம் வரலாறு’ என்று தலைவர் அவர்கள் சொல்லி இருக்கிறார் என்றால், நீங்கள் இருக்கிறீர்கள் என்ற நம்பிக்கையில்தான்.

### உங்களின் கடமை!

திராவிட மாடல் ஆட்சியின் செயல் திட்டங்களை, சாதனைகளை மக்களிடம் கொண்டுசேர்க்க வேண்டிய கடமை உங்களிடம் இருக்கிறது. அதை, நீங்கள் நிச்சயமாக செய்வீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

மணமக்களுக்கு ஒரு வேண்டுகோள். உங்களுக்கு பிறக்கின்ற குழந்தை அது ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருந்தாலும் சரி அழகான ஒரு தமிழ்ப் பெயரைச் சூட்டுங்கள். மணமக்கள் இருவரும் தந்தை பெரியாரும் - பகுத்தறிவும் போல, பேரறிஞர் அண்ணாவும் - தமிழ்நாடும் போல, முத்தமிழறிஞர் கலைஞரும் - தமிழும் போல, நம் தலைவரும் - உழைப்பும் போல இருவரும் ஒன்றாகச் சேர்ந்து பயணிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்த சிறப்பான வாய்ப்பை அளித்த அண்ணன் சேகர்பாபு அவர்களுக்கு மீண்டும் எனது நன்றியைத் தெரிவித்து, உங்கள் சார்பாக மணமக்கள் அனைவரையும் பல்லாண்டு காலம் வாழ்க, வாழ்க என வாழ்த்தி விடைபெறுகிறேன்.

இவ்வாறு அவர் வாழ்த்திப் பேசினார்.

### பங்கேற்றவர்கள்!

அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு, மா.சுப்பிரமணியன், சென்னை மாநகர மேயர் பிரியாராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம்கவி, ஜோசப்சாமுவேல், பரந்தாமன் மற்றும் கூ.பீ.ஜெயின், பி.கே.மூர்த்தி, ஸ்ரீராமலு, சரிதா மகேஷ்குமார், மாவட்டக் கழக நிர்வாகிகள் ஏகப்பன், தேவஜவகர், புனிதவதி எத்திராசன், தேவன், ஆசாத், விஜயகுமார், சந்துரு, மகேஷ்குமார், வட்டக் கழகச் செயலாளர்கள் பிரபாகரன், சதீஷ்குமார் உள்பட கழக முன்னணியினர் பலரும் இதில் கலந்து கொண்டனர்.